www.tamilarangam.net

# தமிழீழ விடுதலைப் புலிகள்
# Liberation Tigers of Tamil Eelam

பிரான்ஸ் கிளை

## சதிகாரக்கும்பலின் ( PLOT இன் ) சித்திரவதைகள் தொடர்கின்றன

தமிழீழ விடுதலைக்காகப் போராடும் தமிழீழ மக்களுக்கு எதிரான சிறீ லங்கா அரசின் இராணுவ அட்டூழியங்கள் நிறைந்த இவ்வேளையில் " விடுதலைக்காகப் போராடுகின்றோம் " என்று கூறிக்கொள்ளும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் பயங்கரக் கொலைகள், சித்திரவதைச் செயல்கள் என்பன தமிழீழத்திலும், தமிழ் நாட்டிலும் தொடர்ந்தவண்ணம் இருக்கின்றன. இக்கொலைகாரக் கும்பலின் மிருகத்தனமான இச்செயல்களை தொடர்ந்தும் மறைக்கமுடியாத, சகிக்கமுடியாத சூழ்நிலையில் இவற்றை நாம் மக்களுக்கு வெளிப்படுத்துகின்றோம்.

* 17-10-1984 அன்று தமிழீழத்தில் எமது விடுதலைப்போராளியான கிட்டு என்பவர் இக்கும்பலினால் கடத்திச்செல்ல முயற்சிக்கப்பட்டபோது அவர் தந்திரமாகத் தப்பித்துக் கொண்டார்.
* 20-11-1984 அன்று மட்டக்களப்புப் பகுதியின் எமது இராணுவப் பிரிவு காப்டன் பசீர் என்பவரை இராணுவ உடைதரித்துச் சென்ற இக்கும்பலில் சிலர் சித்திரவதைக்காகக் கடத்திச்செல்ல முற்பட்டபோது அவர் தந்திரமாகத் தப்பித்துக்கொண்டார்.
* 25-11-1984 அன்று சுழிபுரத்திலே சுவரொட்டிகளோடு சென்ற எமது 6 இளம் புலிகள் இச்சதிகாரக் கும்பலினால் கொடூரமாக சித்திரவதை செய்யப்பட்டு புதைக்கப்பட்டமை யாவரும் அறிந்ததே.
* 01-01-1985 அன்று மதுரையில் எமது போராளியான உதயகுமார் என்பவர் இக்கும்பலினால் கடத்திச்செல்லப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டார்.
* எமது தலைவரின் நடவடிக்கைகளையும், விடுதலைப் புலிகளின் இராணுவ இரகசியங்களையும் அறிவதற்காக 15-01-1985 அன்று தஞ்சாவூரில் எமது இயக்க ஆதரவாளரான சுகுமார் (குணம்) என்பவரை இக்கும்பல் பஸ்வண்டியிலிருந்து இறக்கி, தமது முகாமுக்குக் கடத்திச்சென்று கொடூரமாகச் சித்திரவதை செய்தது.
* தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்திற்கெதிரான அரசியற் பிரசாரத்தில் ஈடுபட்டார் என்ற பொய்க்குற்றச் சாட்டின் பேரில் 12-02-1985 அன்று எமது இயக்க ஆதரவாளரும் முன்னைநாள் பல்கலைக்கழக உதவி விரிவுரையாளருமான ஆதவன் என்பவரை ஆனந்தசங்கரியின் (முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினர் ) இல்லத்திற்கு அண்மையில்வைத்து இக்கும்பல் கடத்திச்சென்று, துப்பாக்கிமுனையில் பலவந்தமாக வெறுமையான பத்திரத்தில் கையொப்பமிட வைத்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

* 05-03-1985 அன்று எமது முகாம் ஒன்றிற்கு பொறுப்பாக இருந்த விடுதலைப் போராளி பொட்டு என்பவர் இக்கும்பலினால் மல்லிபட்டனத்தில் வைத்துக் கடத்திச் செல்லப்பட்டார். எமக்குக் கிடைத்த தகவல்களைத் தொடர்ந்து அவரை எம்மிடம் ஒப்படைக்கும்படி இக்கும்பலின் தலைமைப்பீடத்தைக் கேட்டிருந்தோம். இதுசம்பந்தமாக தமிழ் நாட்டுப் பொலீசாரிடமும் புகார் செய்திருந்தோம். ஆனல் 07-03-1985வரை எமக்கு அவரைப்பற்றிய எந்தவித தகவல்களும் இவர்களிடம் இருந்து கிடைக்காத காரணத்தினுல் சென்னையில் உள்ள தமிழ் செய்தித் தகவல் நிலையத்தில் இக்கும்பலைச் சேர்ந்த ஜோதீஸ்வரன் (கண்ணன்), ரவி ஆகியோரை நாம் நேரில் சந்தித்து எமது போராளியை எம்மிடம் ஒப்படைக்கும்படி கேட்டபோது, அவர்கள் எமது தோழர்களை சுடுவதற்கு முயற்சித்தனர். இந்த நிலையில் தம்மைப் பாதுகாப்பதற்காகவும், எமது போராளியைத் திருப்பிப்பெறுவதற்காகவும் அவர்களின் கால்களில் சுட்டு, கைவிலங்கிட்டு கண்ணனை விசாரணைக்காகக் கூட்டிச்சென்றோம். இதனைத்தொடர்ந்து கடத்திச்செல்லப்பட்ட எமது போராளி குறிக்கப்பட்ட 5 மணித்தியாலத்திற்குள் விடுவிக்கப்பட வேண்டுமென்ற எமது கோரிக்கையின்பேரில், இக்கும்பல் அவரை தமிழ் நாட்டுப் பொலீசாரிடம் ஒப்படைத்தது. எம்மால் கைதுசெய்யப்பட்டவரை விசாரணை செய்தபோது சுழிபுரம் படுகொலையை தமது கும்பலே செய்ததென ஒப்புக்கொண்டார்.

இவர்களின் அடாவடித்தனங்களை கண்டித்து இக்கும்பலின் தலைமைப்பீடத்திற்கு நாம் பலதடவைகள் முறையிட்டிருந்தும் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இந்தநிலையில் இவைபற்றி தமிழ் நாட்டுப் பொலீசாருக்கும் நாம் அறிவித்திருந்தோம். இக்கொலைகார-சதிகாரக் கும்பலை எச்சரிக்கும் நோக்கிலேயே 07-03- 1985 அன்று நாம் இறுதியான இந்நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டியிருந்தது.

## ஏன் இந்த சித்திரவதைகள் ?

இக்கொலைகாரக் கும்பலின் சித்திரவதைச் சம்பவங்கள் அனைத்தும் எமது விடுதலைப் போராட்டத்தை திசை திருப்புவதற்கான நடவடிக்கைகளே. விடுதலைக்காகப் போராடுகின்ற மக்களிடையே குழப்பங்களை ஏற்படுத்தி போராட்டத்தில் வெறுப்புணர்வினை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளே. இன்று தமிழீழ மண்ணில் மக்களோடு மக்களாக நிலைகொண்டிருக்கும் எமது போராளிகளை மக்களிடம் இருந்து தனிமைப்படுத்துவதற்கும், மக்களின் விடுதலை உணர்வை மழுங்கடிப்பதற்குமான செயல்களே இவை.

தமிழ் மக்கள் இச்சம்பவங்களால் அதிருப்தியுற்று மனம் தளரவேண்டியதில்லை. எமது இயக்கப் போராளிகளை சித்திரவதை செய்து அழிப்பதனூடாக மக்களிடையே கொழுந்துவிட்டெரியும் விடுதலை உணர்வுகளையோ, எமது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இயக்கத்தையோ, சோசலிச தமிழீழ அரசின் உருவாக்கத்தையோ அழித்துவிட முடியாது. தமிழ் மக்கள் இத்துரோகிகளை இனங்கண்டு, அவர்களைத் தனிமைப்படுத்தி தமிழீழ விடுதலைப் புலிகளின் புரட்சிகர விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு தருவார்கள் என்பது திண்ணம்.

"ஒற்றுமை" என்ற போர்வையில் PLOT இன் சதி

அண்மையில் அ. அமிர்தலிங்கத்தின் தலைமையில் பல முரண்பட்ட சக்திகள் ஒன்றுபட்டு ஒரு கூட்டமைப்பை அமைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டமை யாவரும் அறிந்ததே. இக்கூட்டமைப்பில் PLOT, EROS, EPRLF, TELO, TELA ஆகிய அமைப்புகள் ஒன்றுசேர முற்பட்டன. ஆனால் சதிகார PLOT இன் கொலைகார நடவடிக்கைகளாலும், சித்திரவதைகளினாலும், பலாத்கார நடவடிக்கைகளினாலும் EROS, EPRLF, TELO ஆகியன இக்கூட்டமைப்பிலிருந்து விலகியுள்ளன. இவைகளுக்கெதிரான PLOT இன் கொலைகார, சித்திரவதைச் சம்பவங்கள் இதோ:

* சுழிபுரத்தில் 6 இளம் புலிகளை படுகொலைசெய்து, புதைத்து ஒருவாரத்தின் பின்னர் மட்டக்களப்பில் EPRLF இன் இரண்டு விடுதலைப் போராளிகளை இக்கும்பல் கடத்திச்சென்று கொடூரமாகச் சித்திரவதை செய்து கொலைசெய்தது.
* மூன்று வாரங்களின் முன்னர் சென்னையில் EPRLF இன் இரண்டு விடுதலைப் போராளிகள் இக்கும்பலினால் கடத்திச்செல்லப்பட்டு கொடூரமான சித்திரவதையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.
* கடந்த வாரம் EROS இனைச் சேர்ந்த முக்கிய உறுப்பினர் ஒருவரை இக்கும்பல் துப்பாக்கிமுனையில் மிரட்டி தமது கட்டுப்பாட்டின்கீழ் ஒற்றுமைப்பட வேண்டுமென பலவந்தப்படுத்தியது. இதனைத்தொடர்ந்து EROS, EPRLF TELO ஆகிய இயக்கங்கள் "ஒற்றுமை" என்ற பெயரில் கூட்டப்பட்ட போலிக் கூட்டமைப்பில் இருந்து விலகியுள்ளன.

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்!

---

பிரச்சார வெளியீட்டு வாரியம், 09-03-1985
தமிழீழ விடுதலைப் புலிகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்